# மாதிரி வினாத்தாள்

# செவிலியர் பாடம் - **Optional**

## மேல்நிலை இரண்டாமாண்டு

நேரம் : 3 மணி　　　　　　　　　　　　　　　　　　　　　　　　மதிப்பெண் 150

பகுதி அ - அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

பகுதி ஆ - ஏதேனும் பதினைந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

பகுதி இ - முதல் கேள்வி கட்டாயமாக விடையளிக்கவும். மீதமுள்ள கேள்விகளில் ஐந்துக்கு விடையளிக்கவும்.

பகுதி ஈ - ஏதேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும்

### பகுதி அ

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி

**I.** கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான விடையைத் தேர்ந்தெடு　　　　**10 x 1 = 10**

1. நச்சு நுண்ணுயிரிளால் பரவும் நோய்

அ. தொண்டை அடைப்பான்　　　ஆ. இரண ஜன்னி

இ. கக்குவான் இருமல்　　　ஈ. தட்டம்மை

2. புட்டாளம்மை என்பது நச்சு நுண்ணுயிரிகளால் பரவுகிறது இவை பாதிக்கும் பகுதி

அ. பரோடிட் சுரப்பி　　　ஆ. பிட்யூட்டரி சுரப்பி

இ. தைராய்டு சுரப்பி　　　ஈ. அட்ரினல் சுரப்பி

3. காலரா என்பது ஒட்டிப் பரவும் நோய் இதன் நுண்மங்களின் பெயர்

அ. நுண்மங்கள்　　　ஆ. நச்சு நுண்ணுயிரிகள்

இ. மைகோ பாக்டிரியம்　　　ஈ. விப்ரியோ

4. கல்லீரல் அழற்சி பாதிக்கப்படும் பகுதி

அ. கணையம்　　　ஆ. இரைப்பை

இ. கல்லீரல்　　　ஈ. குடல்

5. கலோரி என்னும் அளவு. அளக்க பயன்படுகிறது

அ. ஆக்க வளத்தை　　　ஆ. உஷ்ணத்தை

இ. சக்தியை　　　ஈ. வளர்ச்சியை

6. வைட்டமின் $B_{12}$ உடலுக்கு இரத்த ஓட்டத்தை உண்டாக்க தேவைப்படுகின்றன.

அ. வெள்ளை அணுக்கள்　　　ஆ. சிவப்பு அணுக்கள்

இ. பிளாஸ்மா　　　ஈ. வேறு எதுவும் இல்லை

7. குழாய் மாத்திரைகள் செய்யப்படுவது

அ. மாத்திரைகளினால்　　　ஆ. ஜெலட்டினால்

இ. திரவத்தினால்　　　ஈ. பொடிகளினால்

8. எலும்பு முறிவில் ஒரு பகுதி முறிந்தும் மறு பகுதி வளைந்தும் காணப்படும் இதற்கு

அ. கூட்டு முறிவு | ஆ. சாதாரண முறிவு

இ. பச்சைக் கொம்பு முறிவு | ஈ. குழிந்த முறிவு

9. சுய நினைவற்றுப் போதல் என்பது நோயாளி தனது சுற்றுப்புறத்தில் நிலையில்லாமலும், வெளியில் நடப்பதை உணராமலும் இருப்பதற்கு மறு பெயர்

அ. ஸ்டுபர் அல்லது கோமா | ஆ. வலிப்பு

இ. அழுத்தம் | ஈ. மூளையில் ஏற்படும் இரத்தக்கசிவு

10. இந்த முறையானது எனாமல், உலோகம், கண்ணாடிப் பொருட்களுக்குப் பொருத்தமானது

அ. கொதிக்க வைத்தல் | ஆ. வடிகட்டுதல்

இ. வேதியல் முறைப்படி | ஈ. உலர் வெப்பம்

**II.** கீழ்க்கண்டவைகளுக்கு சரியா, தவறா என்பதை எழுதுக. **10 x 1 = 10**

11. தண்ணீரிலும் உணவிலும் பரப்பக்கூடிய நோய்கள், தட்டம்மை, சாதாரண சளி.

12. டைபாய்டு காய்ச்சலின் அடையாளங்கள் அறிகுறிகள் ஒரு வாரத்திறகு மேல் அதிக காய்ச்சல் இருக்கும்.

13. புரதச்சத்தின் குறைபாடு மராஸ்மஸ்.

14. கார்போஹைடிரேட்டின் மூல ஆதாரங்கள் அரிசி, கோதுமை, தானியங்கள், வேர் உள்ள கிழங்கு வகைகள்.

15. பாக்டீரியா நுண்மங்களால் பரப்பப்படும் நோய்கள் காலரா, டைபாய்டு, சீதபேதி.

16. விப்ரியா என்றும் நுண்மம் டைபாய்டு காய்ச்சலின் நுண்மம்.

17. நாக்கில் ஏற்படும் அழற்சிக்கு ஸ்டெமடைட்டிஸ் என்று பெயர்.

18. வாயில் ஏற்படும் அழற்சிக்கு கிளாஸைட்ஸ் என்று பெயர்.

19. கார்போஹைடிரேட்டின் குறைபாடு குவாஷியார்க்கர்.

20. தொற்று நீக்கு முறை என்பது நுண்யிரி அற்றுப்போகும்படி நோய்க்கிருமிகள் இல்லாமல் செய்யும் முறையாகும்.

**III.** கோடிட்ட இடங்களை நிரப்புக. **20 x 1 = 20**

21. 1950 வரையிலும் ______________ தான் இந்தியாவின் சுகாதாரக் கோட்பாடுக்கான பெரும் பிரச்சனையாக கருதப்பட்டது.

22. 1990ல் ______________ ஒருங்கிணைந்த தொண்டாக உலக சுகாதார நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

23. ___________ ஒவ்வொரு பள்ளிக்கூடமும் முதலுதவிக்காக தயாராக வைத்திருக்க வேண்டும்.

24. ______________ சுகாதார பணியின் முதுகெலும்பாகும்.

25. தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டம் இந்தியாவில் ______________ல் ஆரம்பிக்கப்பட்டது.

26. ஆங்கில சொல்லான மிட் ஒய்ப் என்றால் பிரசவத்தின் போது ______________ கவனிப்பவர் என்று பொருள்.

27. மாதவிலக்கு வெளிவருவதும். குழந்தை பிறக்கும் வழிக்கு ______________ என்று பெயர்.

28. கருவகங்கள் கருவணுவை உற்பத்தி செய்வதோடல்லாமல் ______________ ஹார்மோன் களையும் உற்பத்தி செய்கின்றன.

29. _______________ மெல்லிய திரவத்தை சுரந்து சிறு நாளங்கள் வழியாக சிறுநீர் குழாய்க்கு அனுப்புகிறது.

30. ________________ மஞ்சள் கூட்டினை புரொஜெஸ்ட்ரான் உற்பத்தி தூண்டுவதே வேலையாகும்.

31. __________________ கருவகங்களை ஈஸ்ட்ரோஜன் உற்பத்தி தூண்டவும் கருவ முதிர்ச்சி அடையவும் உதவி புரிகிறது.

32. ________________ என்பது மாதவிடாய் நின்று போதல்.

33. ________________ இதில் தான் முதிர்கரு மிதந்து கொண்டிருக்கும்.

34, கருவுயிரின் சீரான வளர்ச்சிக்கு ______________ தேவை.

35. ______________ என்பது சிறுநீர்த் தாரையிலிருந்து குழல் மூலமாக சிறுநீரை வெளியேற்றுவது.

36. ______________ என்பது இந்த அறுவை சிகிச்சைக்கு நோயாளியின் உடலில் பெரிய பாகம் தேவைப்படுகிறது.

37. ______________ இவை நோயை உண்டாக்கும் தன்மையுடையவை.

38. ______________ தாவரவகை நுண்ணுயிரிகள்

39. ______________ விலங்கு வகை நுண்ணுயிரிகள்

40. ______________ பாக்டீரியாக்களை விட சிறந்தவை.

**IV.**பொருத்துக **10 x 1 = 10**

| | | |
|---|---|---|
| 41. புரோட்டோசோவா | - | தாவர வகை நுண்ணுயிரிகள் |
| 42. பூஞ்சைக் காளான் | - | சிறு கம்பி வடிவத்தில் ஆனவை |
| 43. பாக்டீரியாக்கள் | - | முத்தடுப்பு ஊசி |
| 44. D.P.T. | - | விலங்கு வகை நுண்ணுயிரிகள் |
| 45. B.C.G. | - | இந்த நுண்மங்கள் மண்ணிலும் சாணத்திலும் வாழ்கின்றன. |
| 46. கொள்ளை நோய் | - | காலரா |
| 47. இரண ஜன்னி | - | மலேரியா |
| 48. கொசு | - | நீர் மூலம் பரவும் நோய் |
| 49. காற்றினால் பரவும் | - | சாதாரண சளி |
| 50. டைபாய்டு | - | காசநோய் தடுப்பூசி |

பகுதி ஆ

**V.** கீழ்க்கண்ட கேள்விகளில் பதினைந்திற்கு இரண்டு வரிகளில் பதில் எழுதுக. **15 x 2 = 30**

51. இந்தியாவில் பெரும்பான்மையான மரணங்களுக்கும், நோய்களுக்கும் காரணங்கள் யாவை?

52. நோய்த் தொற்று என்றால் என்ன?

53. சளித்துகள் தொற்றினால் பரவும் நோய்கள் யாவை?

54. மேல் மூச்சு பாதையின் தொற்றின் அடையாளங்கள் அறிகுறிகள் கூறு?

55. புட்டாளம்மையினால் ஏற்படும் சிக்கல்கள் கூறு?

56. இளம்பிள்ளை வாதம் என்றால் என்ன?

57. தொற்று நீக்கு முறை என்றால் என்ன?

58. உணவிலுள்ள ஊட்டச்சத்து பொருட்கள் யாவை?

59. அடிப்படை உணவுகள் யாவை?

60. புரதச் சத்தின் மூல ஆதாரங்களைக் கூறு?

61. வைட்டமின் A -யின் நன்மைகளைக் கூறு?

62. இரும்புச்சத்தின் மூல ஆதாரங்களும், குறைபாடும் எழுது?

63. திட்டமிட்ட உணவு என்றால் என்ன?

64. மருந்துகள் என்றால் என்ன?

65. வலி நீக்கிகள் என்றால் என்ன?

66. நச்சு நீக்கிகள் என்றால் என்ன?

67. புட்டாளம்மை வரக்காரணம் என்ன?

68. இரைப்பை அழற்சி என்றால் என்ன?

69. குடல் வால் அழ்ற்சி என்றால் என்ன?

70. மலச்சிக்கல் என்றால் என்ன?

பகுதி இ

**VI.** கீழ்க்கண்டவற்றில் 71 கட்டாயமாகவும், மற்றும் 72-77 எவையேனம் ஐந்து கேள்விகளுக்கு 100 வார்த்தைகளில் பதில் எழுதுக. **6 x 5 = 30**

கட்டாயமாக பதிலளிக்கவும்

71. மருந்து கொடுப்பதற்கான கொள்கை முறைகள் யாவை?

அல்லது

மருந்து செலுத்தப்பட வேண்டிய வழிகள் யாவை?

72. கல்லீரல் அழற்சியின் வகைகள் கூறு?

73. காச நோய்க்கான அடையாளங்கள் அறிகுறிகள் கூறு?

74. எலும்பு முறிவின் வகைகளைக் கூறு?

75. தடுப்பு ஊசி அட்டவணை கூறு?

76. குழந்தைகளுக்கு ஏற்படும் பொதுவான விபத்துக்கள் யாவை?

77. புரதத்தின் குறைபாடுகளைக் கூறு?

பகுதி ஈ

**VII.** ஏதேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளி

விடைகள் ஒவ்வொன்றும் 100 வார்த்தைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்

**4 x 10 = 40**

78. தொற்று நோயாளியை தனிமைப்படுத்துதலின் விதிகள் யாவை?

79. நுண்ணுயிர் நீக்கிய பொருட்களை எவ்வாறு கையாளுவாய்?

80. நுண்ணுயிர் நீக்கும் முறைகளை விவரி.

81. நல்ல ஊட்டம், போதா ஊட்டம் வித்தியாசங்களை விவரி.

82. ரைல்ஸ் குழாய் வழியாக உணவு ஊட்டலை விவரி?

83. மருந்தினால் ஏற்படும் பக்க விளைவுகள் யாவை?